**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 06–ம்** தேதி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கூடலூர், நீலகிரி மாவட்டம், **அசல் வழக்கு எண்.36/2020** 1973ஆம் ஆண்டு ஆணையுறுதி ஆவணச் சட்டம் 10–வது விதியின் படி திருமதி. A. மகேஸ்வரி, தலைமை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

பெயர் : **திரு.எல்ஜீ எல்தோ தாமஸ் (DW -1)** கிராமம் : கூடலூர்
தந்தை பெயர் : திரு.K.T.எல்தோ தாமஸ் தாலூக்கா : கூடலூர்
ஜாதி : – மாவட்டம் : நீலகிரி
தொழில் : – வயது : 49/2026

---

**06.04.2026**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**4).** நவம்பர் 2016ஆம் மாதம் கோயம்புத்தூர் நீதிமன்றத்தில் இருந்த வழக்கு எண்.825/2016 நடத்துவதற்கு வாதியை நான் அணுகினேன் என்று சொன்னால் சரியல்ல. வேறு ஒரு வழக்கறிஞரை நியமிப்பதற்காக வாதியை அணுகினேன். எதிர்வழக்குரை பாரா 2–ல் காசோலை குற்ற வழக்கு எண்.825/2016–ஐ நடத்துவதற்கு வாதியை அணுகினேன் என்று கூறியிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். வாதியை நான் அவரது அலுவலகத்தில் வைத்து தான் சந்தித்தேன் என்று சொன்னால் சரிதான். அந்த சமயத்தில் வாதியின் இளநிலை வழக்கறிஞர் திருமதி.சோபியா அலுவலகத்தில் இருந்தார் என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை.

**5).** கோவை நீதிமன்றத்தில் வழக்கு ஆரம்பிப்பதற்கு முன்பு வாதிக்கு முன் பணமாக ரூ.35000/– கொடுத்ததாக வா.சா.ஆ.8 பதில் அறிவிப்பில் கூறியிருந்தால் அது தவறாகும். கோவை நீதிமன்றத்தில் நடந்த STC No.825/2016 வழக்கு தொடர்பாக வாதிக்கு ரூ.35000/– பல்வேறு

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.04.06 17:09:25 +0530

சமயங்களில் கொடுத்திருக்கிறேன். வாதி கோவை நீதிமன்றத்தில் STC No.825/2016 வழக்கை நடத்துவதற்கு வேறு ஒரு வழக்கறிஞரை வாதி நியமித்ததற்கு என்னிடம் ஆலோசனை எதுவும் செய்யவில்லை என்று வா.சா.ஆ.8 பதில் அறிவிப்பில் கூறியிருந்தால் அது தவறாகும். வேறு ஒரு வழக்கறிஞரை நியமித்தது குறித்தும், வழக்கறிஞர் கட்டணம் குறித்தும் வாதி என்னுடன் கலந்து ஆலோசனை செய்தார்.

**6).** STC No.825/2016 வழக்கில் 5 லட்சம் காசோலைக்காக தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். STC No.825/2016 வழக்கின் புகார்தாரர் கேசவராஜ் என்று சொன்னால் சரிதான். நான் வாதியிடம் மேற்படி STC No.825/2016 வழக்கு பொய் வழக்கு என்றும், அந்த வழக்கை நடத்துமாறு நான் கூறினேன் என்று சொன்னால் சரிதான். STC No.825/2016 வழக்கு விசாரணையில் இருந்து வந்தபோது வாதி என்னிடம் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து STC No.825/2016 வழக்கை ரத்து செய்யலாம் என்று கூறினார் என்று சொன்னால் சரிதான்.

**7).** வாதி தான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் STC No.825/2016 வழக்கை ரத்து(quash) செய்வதற்கு எனக்கு ஆலோசனை கூறினார் என்று சொன்னால் சரிதான். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் ரத்து(quash) மனுவை நடத்துவதற்கு வாதி மூலமாக பிராங்க்ளின் என்ற வழக்கறிஞரை நான் நியமித்தேன் என்று சொன்னால் சரிதான். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் ரத்து(quash) மனுவை தாக்கல் செய்வதற்கு முன்பு வாதிக்கு நான் பல்வேறு தவணைகளில் ரூ.40000/- கொடுத்திருக்கிறேன். ரத்து(quash) மனு தாக்கல் செய்வதற்கு ரூ.15000/-மும், கோவை நீதிமன்றத்தில் STC No.825/2016 நடத்தியதற்கு

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.04.06 17:09:29 +0530

ரூ.25000/—மும் வாதிக்கு நான் செலுத்தியிருக்கிறேன். எதிர்வழக்குரையில் ரத்து(quash) மனு தாக்கல் செய்வதற்கு ரூ.25000/—மும், STC No.825/2016 நடத்தியதற்கு ரூ.15000/—மும் கொடுத்ததாக கூறியிருந்தால் அது தவறாகும்.

**8).** என்னுடைய சாட்சியம், எதிர்வழக்குரை, பதில் அறிவிப்பு ஆகியவற்றில் ஒன்றுக்கொன்று முரணாக நான் கூறியிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் வாதி ரூ.10000/—ஐத்தை பெற்றுக்கொண்டு வழக்கு நடத்தி கொடுப்பதாக கூறியிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். ஒப்புக்கொள்ளப்பட்ட கட்டணத்தை தவிர அதிகமான கட்டணம் கொடுத்ததற்கு காரணம் என்னவென்று கேட்டால் வாதி அங்கு செல்லவேண்டும், இங்கு செல்லவேண்டும் என்று கூறி பணம் கேட்டதால் நான் கொடுத்தேன். நான் 2, 3 வழக்குகள் நடத்தியிருக்கிறேன்.

**9).** கூடலூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நான் ஒரு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். கூடலூரிலிருந்து கோவை சுமார் 130 கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது. கூடலூரிலிருந்து கோவையில் வழக்கு நடத்துவதற்கு ரூ.10000/—க்கு வழக்கறிஞர் யாரும் ஒப்புக்கொள்ளமாட்டர்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதியிடம் ரூ.10000/—ஐ கோவை வழக்கறிஞரிடம் கொடுப்பதற்காக தான் கொடுத்தேன். வாதி STC No.825/2016 வழக்கில் எனக்காக ஆஜராகவில்லை. STC No.825/2016 வழக்கில் வாதி எனக்காக வக்காலத்து எதுவும் தாக்கல் செய்யவில்லை. எதிர்வழக்குரை, பதில் அறிவிப்பில் வாதி எனக்காக STC No.825/2016 வழக்கில் ஆஜராகி இருந்ததாக கூறியிருந்தால் அது தவறாகும்.

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.04.06 17:09:33 +0530

**10).** வாதி STC No.825/2016 வழக்கில் எனக்காக வக்காலத்து தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. வாதி எனக்காக STC No.825/2016 வழக்கில் ஆஜராக வில்லை என்று பொய்யா சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 09.04.2019ஆம் தேதி STC No.825/2016 வழக்கை காலவரையறை சட்டத்தின் படி ரத்து செய்து உத்தரவு பிறப்பித்திருக்கிறது என்று சொன்னால் சரிதான். நவம்பர் 2016–லிருந்து ஏப்ரல் 2019 வரை நான் வாதியின் சட்ட உதவியை பெற்றிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான்.

**11).** மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் ரத்து மனுவிற்கு காலவரையறை சட்டம் படி பாதிக்கப்பட்டிருக்கும் சட்ட ஆலோசனையை வாதி தான் எனக்கு வழங்கினார் என்று சொன்னால் சரிதான். நான் வாதிக்கு ரூ.40000/– செலுத்தியதற்கான ஆவணங்கள் எதுவும் என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்று கேட்டால் ரூ.25000/– வாதிக்கு நான் செலுத்தியதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியும். ரூ.15000/– ரொக்கமாக கையில் இருந்து கொடுத்தேன். ரூ.25000/– வாதிக்கு செலுத்தியதற்கான ஆவணங்களை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யாததாற்க்கான காரணம் எனக்கு தெரியாது. நான் கூறுவது போல ஆவணங்கள் எதுவும் இல்லை என்பதால் தான் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**12).** வாதிக்கும் எனக்கும் நடைபெற்ற தொலைபேசி உரையாடலை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நீதிமன்றத்திற்கு கொடுப்பதற்காக ரூ.50000/– வாதி கேட்டதாக என்னுடைய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.8–ல் கூறியிருக்கிறேன் என்று

P. MURUGESAN Digitally signed by P. MURUGESAN Date: 2026.04.06 17:09:37 +0530

சொன்னால் சரிதான். வாதி அவ்வாறு கேட்கவில்லை என்றும், வாதி மீது அவதூராக அவ்வாறு கூறி நான் பதில் அறிவிப்பு அனுப்பியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி எனக்கு அனுப்பிய வாட்ஸ்அப் குறுஞ்செய்தியை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். அந்த ஆவணத்தை நான் சட்டப்படி தாக்கல் செய்திருக்கிறேனா இல்லையா என்பது குறித்து எனக்கு தெரியாது. வாதிக்கு எதிராக எவ்வித ஆவணங்களையும் சட்டப்படி நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**13).** வா.சா.ஆ.8 பதில் அறிவிப்பில் வாதிக்கு எதிராக தமிழ்நாடு பார் கவுன்சிலில் நடவடிக்கை எடுக்கப்போவதாக கூறியிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு இதுநாள் வரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். வாதி உண்மையாக நடந்து கொண்டதால் அவருக்கு எதிராக நான் பார் கவுன்சிலில் புகார் அளிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு கொடுத்த ரூ.15000/- எத்தனை தவணைகளில், எந்த தேதியில் கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. வாதிக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்காமல் இருப்பதற்காக நான் எதிர்வழக்குரை, பதில் அறிவிப்பு, முதல் விசாரணை சாட்சியத்தில் முன்னுக்குப்பின் முரணாக கூறியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**14).** இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி எனக்கு பல தடவை போன் மூலம் குறுஞ்செய்தி அனுப்பியிருக்கிறார் என்று சொன்னால் சரிதான். 20.08.2018ஆம் தேதி 4.54 மணிக்கு Payment Pending என்று குறுஞ்செய்தி அனுப்பியிருக்கிறார் என்று சொன்னால் சரிதான். 31.08.2018ஆம் தேதி வாதி எனக்கு Forget என்று எனக்கு குறுஞ்செய்தி

P. MURUGESAN Digitally signed by P. MURUGESAN Date: 2026.04.06 17:09:41 +0530

அனுப்பியிருக்கிறார் என்று சொன்னால் சரிதான். 15.09.2018ஆம் தேதி என்னுடைய தகப்பனார் உடல்நிலை சரியில்லை என்று நான் வாதிக்கு குறுஞ்செய்தி அனுப்பினேன் என்று சொன்னால் சரிதாான். மேற்படி நான்கு குறுஞ்செய்தியை தவிர வேறு குறுஞ்செய்தி எதுவும் பி.வா.சா.ஆ.1 சான்றாவணத்தில் இல்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.1 சான்றாவணத்தில் வாதி கேட்ட பணத்தை மறுத்து குறுஞ்செய்தி எதுவும் அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான்.

**15).** வாதி எனக்கு பல தடவை தன் கஷ்டத்தில் இருப்பதாகவும், மீதி கட்டணத்தை தருமாறும் கோரியிருக்கிறார் என்று சொன்னால் சரிதான். வாதி கேட்ட பணத்தை நான் கொடுக்காததால் வாதியின் காரை என் வீட்டு முன்பு நிறுத்தினார் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கை பேசி முடித்துக்கொள்வதற்காக வாதியின் மூத்த வழக்கறிஞர் திரு. ஜார்ஜ் டி மேத்யூ அவர்களிடம் சென்றேன் என்று சொன்னால் சரிதான். வாதிக்கு கொடுப்பதாக ஒப்புக்கொண்ட பணத்தை கொடுக்காமல் ஏமாற்ற வேண்டி நான் எதிர்வாதம் செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் உண்மையை சொல்லவில்லை என்பதால் தான் ஆவணங்களில் முரண்பாடாக நான் கூறியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய எதிர்வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

P. MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.04.06 17:09:45 +0530